சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (பயிற்சிப் பிரிவு) – செல்வி. ரா.மோகனசுந்தரி, இளநிலை உதவியாளர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர் என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(சி)த் துறை

அரசாணை (4டி) எண்.01 நாள். 12.01.2024
சோபகிருது வருடம், மார்கழி–27
திருவள்ளுவர் ஆண்டு 2054
படிக்க:

1. இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை 32, அவர்களின் செயல்முறை ஆணை எண்.59910/பஅ3/2006, நாள்.09.04.2010.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடித ந.க.எண்.33604/பஅ3/2020, நாள்: 12.04.2021.
3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடித ந.க.எண்.33604/பஅ3/2020, நாள்: 25.04.2022 மற்றும் 08.02.2023.
4. அரசு கடித எண். 5532/ஜி2/23–1, மனிதவள மேலாண்மைத் துறை, நாள். 20.09.2023.

-------

ஆணை:–

மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், திருச்சி, அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இளநிலை பயிற்சி அலுவலராக பணிபுரிந்த திரு.க.ராஜாராமன் 31.10.1999 பிற்பகல் பணியிடையில் காலமானதைத் தொடர்ந்து மறைந்த அரசு பணியாளர் திரு.க.ராஜாராமன் என்பவரின் மனைவி திருமதி.ஆர்.இந்திரா என்பவர் 24.04.2000–ல் பணி நியமனம் கோரி விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும், இதன் பின்னர் 23.10.2009–இல் அரசு பணியாளரின் மகள் செல்வி.ஆர்.மோகனசுந்தரி தனக்கு பணி நியமனம் கோரி மாற்று விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. செல்வி.ஆர்.மோகனசுந்தரி என்பவருக்கு பத்தாண்டுகளுக்கு பிறகு 09.04.2010 நாளிட்ட இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி) அவர்களின் செயல்முறை ஆணை எண்.59910/பஅ3/2006, நாள் 09.04.2010, ஆணைப்படி தஞ்சாவூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு தனியர் 16.04.2010 முற்பகல் இளநிலை

உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார் என்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. அரசு பணியாளர் திரு.க.ராஜராமன், இளநிலை பயிற்சி அலுவலர் பணியிடை இறந்த நாள். 31.10.1999-க்கு பின்னர் பத்தாண்டுகளுக்கு பிறகு மாற்று விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டத்தில் மாற்று வாரிசுதாரருக்கு பணி நியமனம் வழங்கிட திட்டத்தில் வழிவகை இல்லை.

4. மேற்கூறிய சூழ்நிலையில், செல்வி.ரா.மோகனசுந்தரி, இளநிலை உதவியாளர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர் என்பவருக்கு அவர் பணியில் இணைந்த நாளான 16.04.2010 முற்பகல் முதல் விதிகளை தளர்த்தி அவரது பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்கூறிய சூழ்நிலையில், தமிழ்நாடு குடிமை பணிகள் (கருணை அடிப்படையிலான பணிநியமனங்கள்) விதிகள், 2023ன் விதி 17ல் குறிப்பிட்டுள்ள அரசுக்கான அதிகாரத்தினை பயன்படுத்தி, கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட செல்வி.ரா.மோகனசுந்தரி, இளநிலை உதவியாளர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர் என்பவருக்கு மேற்கூறிய விதிகளில் விதி 9-ஐ தளர்வு செய்து தனியரது பணியினை 16.04.2010 முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார். மேலும், நிலுவைத் தொகை கூடுதலாக வழங்கப்பட்டது என பின்னர் தெரிய வந்தால், அத்தொகை வருங்காலங்களில் தனியரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

7. இவ்வாணை குறித்து உரிய பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032. (இ)
(அசல் மூலச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).
செல்வி. ஆர். மோகனசுந்தரி, இளநிலை உதவியாளர் (வழி:-ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032).
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

<u>**நகல்**</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் சிறப்பு முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு–II) துறை, சென்னை – 600 009.

இருப்பு கோப்பு / உதிரி நகல் (கோ.எண்.efile/ 4144/சி/2023)

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**